வெளியீடு எண். 2.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கலியாணம்



ஆக்கியோர்

ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை

வெளியிட்டோர்

அறுபத்து மூவர் மடத்து நிர்வாகிகள்

1961

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

திருக்கலியாணம்

ஆக்கியோர்

திருநெல்வேலிப் பேட்டை
சித்தாந்த பண்டித பூஷணம்
உயர்திரு. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள்

வெளியிட்டோர்
நெல்லை, தடிவீரையன் கோவில் தெரு,
அறுபத்து மூவர் மடத்து
நிர்வாகிகள்.

1961

பதிப்புரை

“சுயமரியாதை யியக்கச்சூருவளி” என்னும் என் நூலில் கலியாணம் என்பது பற்றி விரிவான ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளது. அவ்வடிப்படையில், திருக் கலியாணம் என்னும் பொருள் பற்றி இரண்டு, மூன்று இடங்களில் நான் சொற்பொழிவாற்றினேன். அதைக் கேட்ட நன் மக்களிற் சிலர் அஃது அச்சாகி வெளிவர வேண்டுமென விரும்பினர்கள். அதனுல் அச்சொற்பொழி வைக் கட்டுரையாக நான் எழுதி வைத்திருந்தேன். திருநெல்வேலி, தடிவீரையன்கோவில் தெரு, அறுபத்து மூவர் மடத்தின் நிர்வாகிகளாயுள்ள சைவசீலருக்கு அது தெரியவந்தது. அவர்கள் அதனருமை தெரிந்து அம் மடத்தின் வருவாயில் ஒரு பகுதி செலவு செய்து அதனை அச்சிட்டுப் புத்தகமாக்கி யுபகரித்தார்கள். அங்ஙனமே அவர்கள் இதற்கு முன்னும் ‘சந்தான குரவர் வரலாறு’ என்றெரு நூல், வெளியிட்டிருக்கிருர்கள். சைவசமய சேவைக்கான இத்தகைய புத்தகங்கள் இன்னும் பல அவ் வப்போது வெளியிட வேண்டுமென்பது அவர்களின் உத்தேசம். அவர்களின் அச்சிவபணி, பணம் படைத்த மற் றைச் சைவ ஸ்தாபனங்களின் நிர்வாகிகளுக்கும் தனிப் பட்ட சைவசமயச் செல்வர்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும். திருநெல்வேலி ஸ்ரீ காந்திமதியம்பா சமேத ஸ்ரீ சாலிவா டீசுரப் பெருமானுர் திருக்கோயிலில் இவ்வாண்டு (4-11-61) நடைபெறுகிற திருக்கலியாணத் திருவிழாவில்” திருக்கலியாணம் என்னும் இப்புத்தகம் வெளியிடப்படு கிறது. இவ்வுபகாரஞ் செய்த சிவபுண்ணிய சீலர்களாகிய அந் நிர்வாகிகளுக்கு நான் என் நன்றியையும் வணக்கத் தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந் நூலுக்கு அபிப் பிராயங்கள் தந்த திருவாளர்கள். ஈரோடு அ. ஞானசம்பந் தம் அவர்களுக்கும், கயப்பாக்கம் சோமசுந்தரஞ் செட்டி யார் அவர்களுக்கும் என் நன்றி.

ஆக்கியோன்,

ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை

அணிந்துரை (1)

பழநி (சென்னிமலை) சைவசித்தாந்த சரபம் மஹா மஹோபாத்யாய சிவஸ்ரீ ஈசாநசிவாசாரிய சுவாமிகளவர்களின் திருவடித் தொண்டரும் மாணவருமாகிய ஈரோடு (சென்னிமலை) உயர்திரு அ·ஞானசம்பந்தம் எழுதியது.

அநாதிமல முத்தராகிய சிவபிரானுரிடத்தும், ஆன்மாக்கள் உய்திபெறும் பொருட்டுப் பெருங்கருணையினுலே அவர் அருளிச்செய்த வேத சிவாகமங்களிடத்தும், அவற்றினரும் பொருள்களை யெல்லாம் எம்மனோரும் அறிந்து அப்பெருமானுரிடத்துப் பத்திசெய்து முத்திபெறும் பொருட்டு அப்பெருமானுரது திருவருள் பெற்றவர்களாகிய சைவ சமயாசாரிய மூர்த்திகள், சைவசமய சந்தானுசாரிய மூர்த்திகள் திருவாய்மலர்ந்தருளிய சைவத்திருமுறைகள் சைவ சித்தாந்த சாத்திரங்களிடத்தும் அசைக்க முடியாத நம்பிக்கையும், அளவிலடங்காத பற்றுங் கொண்டவர்களும், அவற்றை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தாய்ந்து உண்மைமுடிபு கண்டு தாங்கண்ட முடிபுகளை அஞ்சாது அவையினிடத்துப் பிரசங்கித்தும், நூல்கள் வாயிலாக எழுதி வெளியிட்டும் இன்றியமையாச் சிறப்பிற்றுய சிவத்திருத்தொண்டினைச் செய்துவரும் மஹோபகாரிகளுமாகிய பேட்டை (தற்சமயம் சங்கரநயினுர் கோவிலி லிருப்பவர்கள்) சித்தாந்த பண்டித பூஷணம், சிந்தாந்தப் பேராசிரியர் ஸ்ரீ ஆ·ஈசுர மூர்த்திப்பிள்ளை ஐயா அவர்கள் எழுதி யுபகரிக்கும் 'திருக்கலியாணம்' என்னும் சிறந்த கட்டுரையைப் படிக்கும் பெரும் பேற்றினைப்பெற்றேன்.

இவ்வரிய கட்டுரையிலே கலியாணத்தின் கருத்துக்களும், அதன் இன்றியமையாச் சிறப்புக்களும், பயனும் ஆசிரியரவர்கள் தமக்கே உரிய சிறந்த ஆராய்ச்சி முறை

யில் மிகப்பல நுணுக்கங்களுடன் தகுந்த பிரமாணங்கள் காட்டி யாவரும் எளிதி னுணர்ந்து பயன்பெறுமளவில் எழுதியிருப்பது மிகவும் பாராட்டுதற் குரிய தொன்ருகும்.

கருத்தறியாது செய்து பயனிழந்துவரும் உலகம் கருத்தறிந்து செய்து பயன்பெறுதற்குப் பெரிதும் உதவுவது இந்தக்கட்டுரை என்பதிற் கடுகளவும் ஐயமில்லை. அன்றியும்

திருக்கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் கலியாண மஹோத்ஸவத்தின் உட்கருத்தினை யுணராது அவரவ ருள்ளத்திற் ருேன்றியவற்றை வாயில் வந்தன வந்தன பேசி இழித்துக்கூறி வேறுவழியின்றி எரிவாய் நரகத்துக் காளாகா வண்ணம் உண்மை யுணர்ந்து உலகம் உய்தி பெறுதற்கு இந்தக்கட்டுரை ஒரு சிறந்த வழிகாட்டியாகச் செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனுரருளால் அமைந்துள்ள தென்பது அடியேன்கருத்து.

இந்தக் கட்டுரையினை ஐயா அவர்களைக் கொண்டு எழுதுவித்து நூல் வடிவில் வெளிவருவதற்குப் பொருளுதவி புரிந்துபகரித்த சிவபுண்ணிய சீலராகிய திருநெல்வேலி, தடிவீரையன் கோவில் தெரு, அறுபத்து மூவர் மடத்து அதிபர் களுக்குச் சைவ நல்லுலகம் என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடைய தாம்.

நூலாசிரியராகிய ஐயா அவர்களும், பொருளுபகார சீலர் அவர்களும் ஆகிய இத்தகைய சிவபுண்ணிய கைங்கரியத்தின் மேம்பட்ட உத்தம புருஷர்களிருவரும் இருதலைப்புள்ளி னேருயிர் போல விருந்து அரோக திடகாத்திரர்களாய்ப் பூரணயுளுடன் எவ்வித குறைவுமின்றி இன்புப்பெருவாழ் வெய்தி இன்னுமின்னும் நன்னர் 'எதிர் நூல்'

பல ஒருவரியற்றிடவும், ஒருவர் அதனை அச்சுவாகன மேற்றவும் பெருங்கருணை பாலித்தருளுமாறு பரமகருணா நிதியாகிய நடேசரது திருவடிக்கமல மெமதொரு முடிக்கமலமாகக்கொண்டு மன மொழிமெய்களான் நினைந்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

ஈரோடு,
பிலவ ௵
ஆவணி 29ௐ

இங்ஙனம்
அ. ஞானசம்பந்தன்

உ

அணிந்துரை (2)

சைவசமயத்தினிடத்தும் திருமுறைகளிடத்தும் பேரன்பு வைத்தவரும், ——— தமிழ்நாடு முழுவதும் சைவந்தழைக்க ——— அரும்பாடுபட்ட வரும். ——— ஆங்கிலத்தில் B. A. பட்டம் பெற்றவரும், சமய வளர்ச்சிக் காகவே, தாம் வேலைபார்த்து வந்த கஸ்டம்ஹவுஸ் உத்தியோகத்தைத் துறந்தவரும், ——சென்னையில் சைவ சமய பக்த ஜனசபை எனப் பெயரிய ஒரு சபையை——— நிறுவியவருமான கயப்பாக்கம் திரு. சதாசிவச்செட்டியா ரவர்களிடம் பாடங்கேட்டவரும், அன்னார் தமையனார் குமாரரும், அக்கவுண்டெண்டு ஜெனரல் ஆபீஸில் வேலை பார்த்து ஓய்வு பெற்றவரும், சமயாசாரியர்கள் வரலாறு கள், காரைக்காலம்மையார்———முதலியோரது வரலாறு கள், கந்தபுராண தத்துவம்———முதலிய சிறு நூல்களை எழுதி வெளியிட்டவரும்———ஆகிய கயப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியாரவர்கள் தந்த அணிந்துரை

'எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்'

சைவசமயமே சமயமென்றும், சிவனே பரம் பொரு ளென்றும் நம்சமய நூல்கள் பேசும். சமயநூல்கள்——— தோத்திர வடிவமாகவும், சாத்திர வடிவமாகவும் அமைந் துள்ளன. முன்னையவற்றை————பன்னிரு திருமுறை எனவும்,பின்னையவற்றைப் பதிநான்கு சித்தாந்த சாத்திரங் கள் எனவும் பேசுவர் நம்மவர். ——— நம்முன்னோர்——— சீவகோடிகள் எல்லாம்———பதினான்கு சித்தாந்த சாத் திரங்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்த பின்னர்த்தான் பன்னிரு திருமுறைகளைப் பக்தி சிரத்தையுடன் படனஞ் செய்தல் வேண்டும் என்றருளிப் போந்தனர்.

இனித் தற்காலத்தில் சிவதீக்கை யில்லாதவர் களும், சாத்திரஞான மில்லாதவர்களும் திருத் தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் முதலிய அருணூல்களுக்கு எல்லாம் பொருள் கூறப் புகுந்து விட்டனர். அவர்கள் சைவ சாத்திரங்களின் கருத்தையறிந்து கொள்ள முடியாமலும், அறிந்துகொள்ள வேண்டுமென்ற அவா இல்லாமலும், தம் மனம்போன வகையில் சாத்திர வரம்புமீறிப் பொருள்கூறி இறைவனிட மும், நம் சைவசமய, சந்தாநுசாரியர்கள் பாலும் அபசாரப் படுகிறார்கள்.

திருநெல்வேலிச் சித்தாந்த சைவச் செந்நெறியாளர் ———சைவசித்தாந்த சாத்திரங்களை முறையாகப் பாடஞ் சொல்லிப் பரமனருளை நம்மனோர் பெற்றுய்யுமாறு தக்க ஆசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்தாம் சைவசமயப் பற்றுடையவரும், வேதசிவாகமாதி சாத்திரங்க ளினிடத்து நம்பிக்கையுடையவரும், சாத்திரங்களை நல்ல முறையில் பயின்றவரும்———சாத்திரபாடம் சொல்லி மக் களை நல்வழிப்படுத்தவேண்டுமென்ற ஒரே குறிக்கோளை யுடையவரும், சுயநலங்கருதாதவரும், சிவ, சிவனடியார் பத்தியிற் சிறந்தவரும், திருநெல்வேலிப் பேட்டை (தற் போது சங்கரன்கோவில்) வாசியும், நம் நன்மதிப்பிற்கும் பாராட்டிற்கும் உரியவரு மாகிய உயர்திருவாளர் சித்தாந்த பண்டித பூஷணம் ஆ—ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள் ஆவார்கள்.

இவர்கள் பல உரைநடைநூல்களையும், செய்யுள் நடை நூல்களையும் எழுதி வெளியிட்டு மக்களுக்கு உபகரித் துள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்ததொன்று. இதனை அடியேனும் அறிவேன். தற்போது இவ்வாசிரிய ரால் எழுதி வெளியிடப்பெற்ற 'திருக்கலியாணம்' என்ற

ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றேன். தற்காலத்தில் மக்கள்————————இறை வனிருப்பையும்———ஆராயத்—தொடங்கியுள்ளனர். இது மட்டுமா? ஆண்டவனுக்குக் கலியாணம் ஏன்?——— ஆண்டுதோறும் கலியாணம் அவனுக்கு ஏன் செய்விக்க வேண்டும்? எனப்பல கேள்விகள் மூலம் நம் சைவசமயத்த வரைப் பரிகசித்துக் கூறுவார் பலர். அவர்களை நல்வழிப் படுத்தும் பொருட்டு ஆராய்ச்சி நூலாகத் 'திருக்கலியா ணம்' என்ற நூல் வெளிவருவது மிகப்பொருத்தம். இந் நூலை மக்கள் பெற்றுப் படித்துத் திருமணதத்துவத்தை நன்குணர்ந்து அதன்படி ஒழுகுவார்களாக. இந்நூலை எழுதி உபகரித்த என் ஆப்த நண்பர் திரு. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் எல்லாவித——இகபர சௌபாக்கியங்களு டனும் நீடுவாழவேண்டுமென——கந்தப்பெருமானின் கழல்களை யிறைஞ்சுகின்றேன். இந்நூல் அச்சாகி வெளி வருதற்குப் பொருளுதவி புரிந்த திருநெல்வேலி தடிவீரை யன்கோவில்தெரு அறுபத்து மூவர் மடத்து அதிபர்களும் எல்லா நலன்களுடன் இனிது வாழக் குமரப்பெருமான் திருவருள் புரிவாராக.

வாழ்க சைவம்! வாழ்க சீரடியா ரெல்லாம்!!

சென்னை 5
11-9-61

இங்ஙனம்
கயப்பாக்கம்—சோமசுந்தரம்

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடிவாழ்க.

திருக்கலியாணம்.

தோற்றுவாய்

தெய்வம் ஒன்று. அது முற்றறிவுள்ளது, எல்லாம் வல்லது, பேரருளுடையது. அதனுல் வணங்காமை அதற் கியல்பாயிற்று, அது யாரையும் வணங்கவேண்டாம். விலங்கு பறவையாதியவற்றுக்கு அத்தெய்வகுணமில்லை. வணங்காமை அவற்றுக்கும் இயல்புதான். ஏன்? வணங்க வேண்டுமென்ற உணர்ச்சி அவற்றுக்கில்லை. ஆகலின் அவையும் வணங்கா. ஆனுல் மனிதன் வணங்கும் இயல் புடையான். வணங்குஞ்செயல் தொன்று தொட்டே அவனிடம் இருந்து வருகிறது. அஃதின்னும் இருந்து வரும். எம்மனிதன் வணங்க மறுக்கிருனே அம்மனிதன் மனிதனல்லன்.

ஆனுல் மனிதன் முக்கியமாக யாரை ஏன் எதற்காக வணங்கவேண்டும்? வணங்குபவன் அவ்வினுவுக்கு விடை தெரிக. அவ்விடை பலவாயிருக்கலாம். சமய நூல்களில் ஒரு விடையுண்டு. சமயங்கள் பல. பதி பசு பாசம் என் பவற்றின் இயல்பைச் செவ்வையாக விளக்குவதே சமயத்தின் இலக்கணம். அவ்விலக்கணம் நிரம்பிய சமயம் ஒன்றுதான் இருக்கமுடியும். சித்தாந்தசைவமே அச்சமயம். அதுதான் அவ்வினுவுக்குச் சரியான விடைசொல்ல வல் லது. சிவபிரானே பரதெய்வம், பரமபதி, பரம்பொருள், பரமாத்மா, பரப்பிரமம். மனிதன் குறைவுடையவன், நிறை

வை வேண்டுபவன். நிறைவாவது நிரந்தர வின்பம். அவனுக்கு அக்குறையை நீக்கி, அவ்வின்பத்தை யருள வல்லார் அக்கடவு ளொருவரே. அவனும் அவரை வணங்கியே அக்குறையிலிருந்து விடுபட்டு அவ்வின்பத்தைப் பெறுதற்குரியான், ஆகலின் அவன் அவரை வணங்குக. அதனுல் 'அக்குறையைப் போக்கிக்கொள்க. அவ்வின்பத்தைப் பெற்று வாழ்க. வணக்கத்துக்குப்பயன் அது. இது அவ்விடை.

சைவசமயத்தவர் வணங்குமிடம் சைவாலயங்கள். அங்குச் செய்யப்படும் வணக்கமுறைகள் பல. அவை சிறப்பு, பூசனை என்ற இரண்டிலடங்கும். திருக்கலியாணமும் ஒரு வணக்கமுறை. அது சிறப்பிற்சேரும். வணக்க முறைகளுக்கெல்லாம் விதிநூலாவன சிவாகமங்கள்.

நாத்திகர், ஆத்திகர் என மாந்தர் இருவகைப் படுவர். தெய்வமில்லை யென்பார் நாத்திகர். தெய்வம் உண்டு, அது கலியாணஞ்செய்து கொண்டது என்பது அவருக்குச் சிரிப்பாகும். அவர் தொகை பல்கோடி. தெய்வம் உண்டென்பார் ஆத்திகர். அவருள் ஒரு சாரார் அத்தெய்வம் ஆண் எனக்கொண்டு வணங்குவர். அது கலியாணஞ் செய்துகொள்ளாது என்பது அவர் கொள்கை அவர் தொகையும் மிக்கது. தெய்வம் ஆண், அது கலியாணஞ்செய்து கொண்டது என்பார் இன்னெரு சாரார். இவர் தொகை மிகச்சிறிது. அக்கலியாணத்தை அவருங்கேட்டுச் சிரிப்பர். பரிகசிப்பார் அங்ஙனம் இருவகையார். அவர் கூட்டுச்சேர்ந்து கொள்வதுமுண்டு. அதனுல் கலியாணசாமியை வணங்கிவருவார் மிகச்சிறுதொகையினர், அக்கலியாணத்தைப் பரிகசிப்பார் மிகப்பேரளவினர் ஆகின்ருர். அப்பரிகாசமுங் கடுமை. கலியாணசாமியை வணங்குபவர் அவ்வெதிர்ப்புக்கு ஆளாகாமை வேண்டும்.

அதற்காக அவர் அவ்வணக்க முறையை ஆய்க, அதன் தாற்பரியத்தை அறிக, அதனைப்போற்றி உய்க. அவ்வகையிற் சிறிதே உதவ எழுந்தது இந்நூல்.

மக்கட் பேறும் இன்ப நுகர்ச்சியும்.

தாவரத்தில் ஆண் பெண் உண்டு. வண்டு, ஈ முதலியவற்ருல் பூக் கருவாகும். விதை வரும். விதை மீண்டும் மரமாம், தாவரத்தில் வமிசம் விருத்தியாவது இப்படி. அதில் ஆண் பெண் கலவா, இன்பமும் நுகரா, விதை வேண்டும், அது முளைத்து மரமாகவேண்டும், இனம் விருத்தியாகவேண்டும் என்ற ஆசை தாவரத்துக்கு எப்போதுமே கிடையாது.

விலங்கு பறவை முதலியவற்றிலும் ஆண் பெண் உண்டு. அவை இன்பத்தை மாத்திரம் இச்சிக்கின்றன. அதனுல் அவை கலக்கும், இன்பத்தையும் நுகரும். கலவியில் தாய் தமக்கை தங்கை முதலிய முறைகளையும் அவை கவனியா. தமக்குக் குட்டி குஞ்சுகள் வேண்டுமென்ற ஆசை கலவிக்கு முன் அவற்றிடமுமில்லை. கலவியின்பத்தால் வருவன குட்டி குஞ்சுகள். அவை வந்தபின்னரும் அவற்றைத் தாய்மாத்திரம் நேசிக்கிறது. அந்நேசமும் சிறிது காலமே யிருப்பது. அவற்றை ஈன்ற தந்தைக்கும் அவற்றுக்குந் தொடர்பு சிறிது மிராது, பாசமும் பிறவாது.

மனித வருக்கத்துள் வேசியிடம் ஆடவர் வருகின்றனர் கலவி நிகழ்கிறது. இன்பங் கிடைக்கிறது. பிள்ளையாசை கலவிக்குமுன் அவளுக்கும் அவருக்கும் இருக்க முடியாது. ஆயினும் பிள்ளை பிறக்கிறது. அங்கும் விலங்குத் தாய்போல் வேசித் தாய்தான் அப்பிள்ளையை வளர்க்கிருள். அப்பிள்ளைக்குத் தந்தையான ஆடவன் எவனே? அவனும் விலங்குத் தந்தைபோல் அப்பிள்ளையை விட்டு விலகுகிருன்

தாவரம் இனவிருத்தி செய்கிறது, இன்பம் அனுபவிக்கவில்லை. விலங்குபறவையாதிகளும், வேசியும் அவளைக் கலக்கிற ஆடவரும் இனவிருத்தியும் செய்கின்றன, இன்பமும் அனுபவிக்கின்றன. ஆனால் இனவிருத்தி, இன்ப நுகர்ச்சி ஆகிய இரண்டன்பொருட்டும் அத்தாவரமும், விலங்கு பறவையாதியவும், வேசியாதியரும் கலியாணஞ் செய்து கொள்ளுகின்றனவா? இல்லை. கலியாணமில்லாமலே அவற்றுக்கு அவ்விரண்டும் தாராளமாய்க் கிடைக்கும். அங்ஙனமாக அவ்விரண்டையுங் கலியாணத்தின் குறிக்கோளெனப் பேசுவது சிறிதும் பொருந்தாது.

கலியாணம்

கலியாணம் என்பது மனிதசமுகத்திற்றான் இருந்து வருகிறது. அது தொன்றுதொட்டது, அச்சமுகத்துக்கே உரியதொரு சிறப்பினது. அச்சமுகம் மனிதசமுகமாயிருக்கும் வரை அச்சிறப்பு அழியாது. கணவனுக்கு மனைவியை வாழ்க்கைத்துணை யென்றார் வள்ளுவர். அவள் எப்படித் துணை யாவாள்? சமையல் செய்துகொடுத்தல் முதலியவற்றாலா? அதற்கொரு வேலைக்காரனோ வேலைக்காரியோ போதும். மனைவியென ஒருத்தி வேண்டாம். அன்பை அரும்பச் செய்து வளர்க்கவா? கலவிக்குத் தகுதியற்றவள் ஒருத்தி. அது தெரியாமல் அவளை ஒருவன் மணக்கிறான். அவனுக்கு அவள் துணையாயிருந்து அன்பை வளர்ப்பது சாத்தியமா? சகோதர வாஞ்சையும் அன்புதான். ஆனால் சகோதரன் சகோதரியை மணந்து அவ்விருவரும் பரஸ்பரம் வாஞ்சித்ததில்லை. நண்பரிருவர் நட்பினராகின்றனர். ஒருவனை ஒருவன் மணந்து அவ்விருவரும் நண்பராகிலர். ஆகலின் அவையும் கலியாணத்தின் நோக்கமல்ல.

பெண் மாதந்தோறும் நாலைந்து நாட்கள் கலவிக்கு உதவமாட்டாள். கருக்கொண்டால் வேதனைப்படுவாள்

பிரசவத்திலும் அப்படியே. கருவுயிர்த்த பின்னர் நாலைந்து மாதங்களாவது கலவிக்கு அஞ்சுவாள். தொடர்ந்து கருவுயிர்த்தால் உடல்வலி குன்றினுங் குன்றுவள். துன்மார்க்கத்தால் கருக்கொண்டால் நிந்தைக்கு இலக்காவாள். நாற்பது நாற்பத்தைந்து வயதுக்குமேல் கருக்கொள்ளும் ஆற்றலையிழப்பாள். இன்ன சங்கடங்கள் இன்னும் பல. அத்தனைக்கும் இடமானது பெண்பிறவி. ஆண்பிறவிக்கு அவையில்லை. அதனை அவள் உணரின் வமிச விருத்தியிலும் கலவியின்பத்திலும் அவளுக்கு மனங்கொள்ளாது. ஆகலின் கலியாணம் பெண்டிர் பொருட்டென்பது சரியன்று.

ஆனால் ஆடவரிடம் ஒரு சிறப்பியல்பு உண்டு. அது தான் பிள்ளையாசையென்பது. வேறு எப்பிராணிகளிடத்திலும் ஆணுக்கு அவ்வாசை யில்லை. குட்டி குஞ்சுகள் வந்த பின்னரும் அவ்வாண் அவற்றை விரும்பாது. அது முன் சொல்லப்பட்டது. ஆடவர் தமக்குப் பிள்ளை வேண்டுமென விரும்புகின்றனர். அவ்வாசை அவரிடம் கலியாணத்துக்கு முன்னரே அரும்பிவிடுகிறது. அஃதவரிடம் இயற்கையாயுள்ளது, தவறானது மன்று. அதை அவர் நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். ஆனால் பெண்ணின் துணையின்றி எவனுக்கும் அது கூடாது. அவன் அதற்கென ஒரு பெண்ணைக் கொள்கிறான். எப்படி? அவன் பெற்றோர் முதலிய நல்லுறவினரும், அவள் பெற்றோர் முதலிய நல்லுறவினரும் சந்திக்கின்றனர். குலம், கோத்திரம், குணம் முதலிய பற்றி விசாரணை நடக்கிறது. அவ்விருதிறத்தினருஞ் சம்மதிக்கின்றனர். பின்னர் விதிமுறையில் அவன் அவளைக் கொள்கிறான். அதுவே கலியாணம். அவ்விருகுடும்பத்தினரின் சம்பந்தமே கொண்டான் கொடுத்தான் சம்பந்தமாகும். அச்சம்பந்திகளாவார் சம்மதமின்றி, விதிமுறையின்றிச் செய்து கொள்ளப்படுங் கலியாணம் கலியாண மாகாது. அச்சம்மதம் பெற்று, அவ்விதிமுறையே நடைபெறுங் கலியாணத்

தால் அவன் கணவனும், அவள் மனைவியும் ஆகின்றனர். அன்றுமுதல் அவன் அவளை உடையவன்- அவள் அவனுக்கு உடைமை. அவள் வாழ்க்கையின் பொறுப்பு முழுவதையும் அவனே ஏற்றுக்கொள்கிறான். அஃதவனுக்குக் கடன், மானந்தருவது மாகும். அவனாற்காக்கப்பட்டு அச்சமின்றி வாழ்கிறாள் அவள். அவன் அவளைக் கலக்கிறான், சுகிக்கிறான், பிள்ளை பெருகிறான், அதனோடு கொஞ்சி மகிழ்கிறான். அவன்பாலுள்ள பிள்ளையாசை நிறைவேறுகிறது. அதற்கு வைத்ததே கலியாணம். ஆகலின் கலியாணம் ஆடவர்பொருட்டென்பதே சித்தம்.

ஸ்பெர்மடோஸஊன் (Spermatozoon) என்பது ஓர் உயிரணு. அது தந்தைவயிற்றில் இருப்பது; பின் கலவியில் தாய்வயிற்றுக்கு வருவது. அவள் வயிற்றில் ஓவம் (Ovum) என்றோ ரணுவுண்டு. அது சடம். அவ்வுயிரணு அச்சடவணுவிற் புகுகிறது. அவள்வயிற்றில் வளருஞ் சிசு அது தான். பத்தாமாதம் அச்சிசு வெளிப்படும். ஆகலின் அச்சிசுவின் உயிருக்கு மூலஸ்தானம் எது? அத்தந்தையின் வயிறேயாம். அது பற்றிப் பிள்ளையாசை கொள்ளுதற்கு உரிமை ஆடவருக்கே யுண்டு என்க. உயிரணுவுக்குத் தாய் வயிறு மூலமன்று. அவ்வணு அவள்வயிற்றிலும் இருப்பதாயின் கலவிக்கு அவசியமில்லை. ஒரு சிசுவில் ஈருயிர் ஏது? இன்பத்தின் பொருட்டுக் கலக்கலாமெனின் இனவிருத்திப் பொருட்டுக் கலவியென்பதே இயற்கைவிதி. அப்பொருட்டல்லாத கலவியை இயற்கையாகக் கொண்ட வருக்கம் எதுவுமில்லை. அக்கலவி இனநாசத்துக்கே ஏதுவாகும். அவன் வயிற்றிற் சடவணுவும் அவள் வயிற்றில் உயிரணுவும் இருப்பதாயின், அவள் ஒருமுறை கருக்கொண்டு அது வெளிப்படும் வரை அவள்வயிற்றிலுள்ள பிறவுயிரணுக்கள் பிள்ளையுருப்பெற வழியற்றுப்போம். உயிரணுக்கள் அவனிடமேயிருத்தலினால் அவன் பலமனைவியரைக் கலந்து பல சிசுக்

கள் உருவாதற்கு வாய்ப்புண்டு. ஆகவே உயிரணு விருத்தற்கு மூலமல்லாத பெண்டிர் பிள்ளையாசை கோடற்கு உரியராகார். ஆனால் மனைவியாவாள் தன்கணவனை யநுசரித்து அவ்வாசை கொள்ளலாம். தந்தையின் பிள்ளையே தாய்க்குமாகும். அவளும் அப்பேற்றால் மகிழ்வாள். புத்ரவாத்ஸல்யம் அவ்விருவருக்கும் சமமாயுண்டு. அது வாழ்நாள் முழுவதும் அவரிடமிருக்கும்.

கணவன் பால் மனைவியின் கடனென்றுண்டு. அஃதின்றிமையாதது. அதுதான் கற்புடைமை. கற்புடைமையாவது பதிவிரதாதருமம். பதியாவான் கணவன். விரதையாவாள் அவனையன்றி வேறுயாரையும் கலப்பதில்லை யென்ற விரதங் கொண்ட மனைவி. விரதமாவது சத்திய சங்கற்பம். தருமமாவது விசுவசித்தொழுகுதல். அவனுடைய வாழ்விலுந்தாழ்விலும் அவனைத் தன் மரண பரியந்தம் அவள் வஞ்சித்தல் கூடாது. அக்கற்புச் சிறிதே குலையினும் அவள் வயிற்றுப் பிள்ளை அவள்பிள்ளைதான், ஆனால் அவளைக் கொண்ட கணவன்பிள்ளை யென்பதிற் சந்தேகம் பிறந்துவிடும். தந்தைக்குப் பிள்ளையையும், பிள்ளைக்குத் தந்தையையும் தெரியமுடியாது. அவ்விருவரையும் அறிமுகப்படுத்தி வைக்கத் தாயும் இயலாதவளாவாள். அவன் செய்த நன்றியைக் கொன்ற பாதகி அவள். ஆகவே பதிவிரதை பெற்ற பிள்ளைதான் அவளுக்குப் பிள்ளை யென்பதோடு அவள் கணவனுக்கும் பிள்ளை யென்க.

கசப்பு மருந்தும் உண்டு. அதை உண்பவர் சிறிது வெல்லத்தைச் சேர்த்துக்கொள்வர். அம்மருந்து போல்வது கலவி. அது சங்கடமான தொழில். அவ்வெல்லம் போல்வது கலவியின்பம். அச்சங்கடந் தோன்றாமலிருத்தற்கு வைத்தது அது. வெல்லந் தின்ன ஆசைப்பட்டு மருந்துண்பார் அறிஞ ராவரா? அதுபோல இன்பத்துக்கு ஆசைப்பட்டுக் கலவிசெய்பவருந் தரமுடைய ராகார். அக்கலவி விலங்கின்

செயல். அதனுல் குட்டி பிறக்கும். அதுவும் விலங்குதான். மனிதனும் பலவகைகளில் விலங்கை யொத்தவன். அவற்றி லொன்று இன்பத்திற்கெனக் கலப்பது. அக்கலவியிலும் பிள்ளை பிறக்கும். அப்பிள்ளையும் மனிதவடி வுடையதுதான். ஆயினும் விலங்கியல்பே அதனிடம் மிக்கிருக்கும். சோரை களும் வேசிகளும் பெற்ற பிள்ளைகளிடம் பண்பா டிருப்பது துர்லபம். அவற்றின்பால் 'நலத்தின்க ணாரின்மை தோன்' றுவதே மிகுதி. செயற்கைக்கரு உற்பத்தி செய்யப்படுகிற தென்பது கேள்வி. அஃதுண்மையாயின் அவனும் அவளும் மரப்பூக்கள். அவ்வுற்பத்தி செய்பவன் வண்டை, ஈயை யொப்பான். அக்கருவி லுதிக்கும் பிள்ளையும் மனிதவடி வினதுதான், ஆனுல் மரப்பண்பாட்டோடு கூடியதாய்த்தா னிருக்கும்.

கலியாணத்தா லன்றிப் பிறந்த மகன் இலௌகி கத்தில் மேல்நிலையிலிருக்கலாம். ஆயினும் அவனுக்கு முதன்மை கொடுத்து நன்மக்கட் சமுகம் அவன் வழிச் செல்லுதல் கூடாது. தன்னைப்பெற்றவர் போல மற்றவரும் ஆகவேண்டும் என்பதுதான் அவனுக்காசை. அவனே கலியாணம் கலவியின்பத்தின் பொருட்டெனப் பிரசாரஞ் செய்வான், அவன் பேச்சுக்குச் செவிசாய்த்துத் தலை யசைக்கும் பெண்டிருமுளர். அதனுல் அவரை ஆடவர் பலர் பலபடியாலும் அசுசிப்படுத்த நேரும். பண்பாடில்லாத மக்கட்கூட்டம் பெருகுவதே அதற்குப்பயன்.

,குலக்ஷயே ப்ரணச்யந்தி குலதர்மாஸ் ஸநாதநா:
தர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ நம தர்மோபி பவத்யுத:
அதர்மாபி பவாத் க்ருஷ்ணப் ரதுஷ்யந்தி குலஸ்திரீய:
ஸ்திரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ண ஸம்கர
ஸங்கரோ நரகாயைவ குலக்நா நாம் குலஸ்யச

பதந்தி பிதரோஹ்யே ஷாம்லுப்த பிண்டோதகக்ரியா:
தோஷைரேதை: குலக்நா நாம் வர்ண ஸங்கர
காரகை:
உத்ஸாத்யந்தே ஜாதி தர்மா: குலதர்மாச்ச சாச்வதா:
உத்ஸந்ந குலதர்மாணும் மனுஷ்யாணும் ஜநார்தந
நரகே நியதம் வாஸோ பவதீத்யநு சுச்ரும:' (கீதை. I. 40-45) என்ருன் அர்ச்சுனன்.

'வம்சம் நாசமடைந்தால் அநாதியாயிருக்கிற குல தர்மங்கள் முழுதும் நாசமடையும். ஆசாரங்கள் நசித்தால் குலம் முழுமையும் அனுசாரங்கள் வியாபிக்கும், ஹே க்ருஷ்ண! ——அனுசாரங்கள் வியாபித்தால் குலஸ்திரீகள் கெடுவார்கள். பெண்கள் கெடுவார்களே யாகில் ஜாதி வேற்றுமையின்றி ஜாதி கலப்பு களுண்டாகும். ———ஓ கிருஷ்ணு! ஜாதி கலப்பானது குலநாசம் செய்தவர்களுக் கும் குலத்திற்கும் நரகத்திற்கே யாகும். இதுவல்லாமல் இக்குலநாச நஷ்டமடைந்தவர் களுடைய பிதுருக்கள் பிண்டோதக லோபத்தினுல் (நரகத்தில்) விழுவார்கள். குலத்தை கெடுத்தவர்களுடைய ஜாதிக்கலப்பைச் செய்த இந்தப் பாபங்களால் அனுதியாக விருக்கிறவர்ணுச்ரம தர்மங்களும் குலாசார தர்மங்களும் அழிந்துபோய்விடும். ———ஓ. ஜனுர்தனு! குலதர்மங்களே யிழந்த மனிதர் களுக்கு நரகத்தில் எப்பவும் நிவாஸமானது உண்டாகு மென்று (பெரியவர்களால்) கேட்டிருக்கிருேம்' என்பது அதற்கு உரைகாரர் தந்த தமிழ். இதில் எப்பகுதியையும் கிருஷ்ணன் மறுத்ததாகத் தெரியவில்லே. கற்புக்கேடே நாட்டைக் கெடுப்பது என்பதை அதிற்காண்க, விதி முறைக் கலியாணமே அக்கற்புடைமைக்கு வாயில். அக் கற்புடைமையே நன்மக்களேத் தோற்ற வல்லது.

'மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு' (குறள்)

என்றது காண்க. அக்கற் பொழுக்கத்துக்குக் காவலா வார் பெண்டிரே, அக்காக்கு மாற்றை அவர் கற்றுக்கொள் வது நலம்.

தமிழில் புறம், அகம் என இரண்டு துறையுண்டு வீரம் பற்றியது புறம், கலவியின்பம் பற்றியது அகம். அவை ஆன்றோரார் புகழப்பட்டன. ஆயினும் போரின் பொருட்டே வீரம் வேண்டப்படும். வீரத்தின் பொருட்டுப் போர் வேண்டப்படாது. அதுபோல இன்பமுங் கலவிப் பொருட்டே யாம். இன்பத்தின் பொருட்டன்று கலவி, அவ் வின்பம் எத்துணைச்சிறந்ததாயினும் அவ்வரம்புட்பட்டதே. அதனையும், ஆடவர்பாலுள்ள பிள்ளையாசை நிறைவேறுதற் பொருட்டு அவருக்காக விதிக்கப்பட்டதே. அதனையும்,. ஆடவர்பாலுள்ள பிள்ளை ஆசை நிறைவேறுதற்பொருட்டு அவருக்காக விதிக்கப்பட்டதே கலியாணம் என்பதையும்.

'தருக்குறு வனப்பிற் பிறர்க்குரி யவரைத்
தவ்வையிற் றங்கையிற் காண்க
வுருத்திர கணிகை மகளிரைத்தாயி
னுன்னுக வயிணவ மடவா
ரருப்பிளங் கொங்கைத் தாதிகண் மாட்டு
மன்னதே யாகலிற் புணர்ச்சி
விருப்பினை யவர்பான் மறப்பினு மெண்ண
லோம்புக நன்னெறி விழைவார்'
(காஞ்சிப்புராணம்)'

'இருட்சுரி கருமென் மலர்க்குழன் மனையா
ளிளமுலைப் போகமு மகவின்
பொருட்டெனக் கொண்டே விலக்குநா ளொழித்துப்
புணர்ந்தபி னீங்கிவெம் பாந்த

ளரைக்கசைத் தருளு மடிகளி ரடியு
மகந்தழீஇத் துயிலுக மற்றீங்
குரைத்தவா றென்று மொழுகுந ரெங்கோன்
றிருவருட் குரியவ ராவார்' (மேற்படி) என்ற

பாடல்களாலுந் தெரிக.

அகலியாணசாமி

அகலியாணசாமியை வணங்குபவர் கலியாணசாமியை நிந்திப்பர். அந்நிந்தைகள் பல. அவற்றுள் சாமி கலியாணம் பண்ணிக்கொண்டா ரென்ருல் அவரும் மனிதரே. காமவெறி மனிதர்க்குப்போல அவருக்கும் இருக்கிறது என்பதாகும், அவரது கடவுளியல்புக்கு அது குற்றம், காமவெறி கொண்டவர் கடவுளாகார் என்பது முதன்மையானது. அதை மாத்திரம் இங்கே விசாரிக்கலாம். கலவியின்பத்தின் பொருட்டுத்தான் கலியாணம் என்பது அவர் கொள்கை. அஃதப்படியே யாகுக. கலவியின்பங் கடவுளின் தன்மை யன்றென்பதுஞ் சரி. ஆனுல் அவ்வின்பம் மனிதனிடத்துப்போல் விலங்கிடத்தும் உள்ளது. அது மனிதனுக்குரிய தெனத்தனித்துச் சொல்லப்படாது. ஒரு செயல் மனிதனிடத்தும் விலங்கிடத்தும் சமமாயுண்டு. அச்செயல் விலங்கினியல்பு எனவேபடும், மனிதனியல்பு என்றல் சாலாது. ஆகவே விலங்கின் செயலாகிய கலவியின்பத்தின் பொருட்டு அவனுங் கலியாணம் பண்ணிக்கொள்ளுதல் நெறியன்று. ஆனுல் மேளதாளத்தோடு அவன் அதைச் செய்துகொள்ளுகிருன். அதனிழிவு போய்விடுமா? போகாது. அக்கலியாணம் மனிதனுக்குக் கௌரவமாயின் கடவுளுக்குங் கௌரவமாகும். அது கடவுளியலுக்கு ஒவ்வாததாயின் மனிதவியலுக்கும் ஒவ்வாததே. ஆகலின் அது மனிதனுக்கும் அகௌரவந்தான்.

ஆனால் அது மனிதனுக்கு இசையும், கடவுளுக்கு இசை யாது என்று ரவர். மனிதருட் கலியாணம் பண்ணிக்கொள் ளாதவரும் உளர். அவரெல்லாங் கடவுளாகவேண்டும். ஆவரா? ஆகார். ஆகலின் கலியாணம் பண்ணிக்கொள் ளாமையும் விலங்கு முதலியவற்றுக்குப்போல் மனிதருக்கும் உரியதுதான். அவர் கலியாணம் பண்ணிக்கொள்ளாம லிருப்பதற்குக் காரணம் எது, அதுவே அவர்சாமி கலியா ணம் பண்ணிக்கொள்ளாமலிருப்பதற்குங் காரணமா யிருக் கமுடியும். கலியாண வயது வந்த இளைஞன் ஒருவன். அவன் கலியாணம் பண்ணிக்கொள்ளவில்லை. அவன் அய லூர் சென்று தங்க நினைக்கிறான். குடித்தன வீடுகளுக்கிடை யில் அவனுக்கு வீடு கிடைப்பது அரிது. அவன்மேல் அக் குடித்தனக்காரருக்கு நம்பிக்கை பிறவாது. அவன் நம்பிக் கையும் மதிப்பும் பெறவேண்டுமாயின் கலியாணமாகி மனைவியுட னிருத்தல் அவசியம். அவ்வவசியம் அச்சாமிக் கும் ஆகும். இன்றேல் அவரை மாதர் நம்பி நெருங்க அஞ் சினும் அஞ்சுவர். அச்சாமி அக்கௌரவத்தை விரும்பாத வரா? கலியாணவயதை யடையாதவரா? நோயரா? பேடியா? மணமான மனைவியைச்சாகக் கொடுத்தவரா? படுகிழவரா? தம் இஷ்டப்படி பெண் கிடைக்கப் பெறாத வரா? கலியாணம் பண்ணிவைத்தற்கான ஆர்வமுள்ள உறவினரற்றவரா? எந்தப் பெண்ணும் வாழ்க்கைப்பட விரும்பாதவரா? பெண் கொடுப்பாரை யிலரா? பிரமசா ரியா யிருந்துவிட எண்ணியவரா? ஒரு பெண்டை மணந் தால் பிறபெண்டிர் மேலும் இச்சை செல்லுமென அஞ்சிய வரா? மனைவி மக்களுக்கு உழைத்து ஊண் உடை யாதி கொடுத்து அவரைக் காப்பாற்ற விரும்பாத சோம்பரா? மணமில்லாமலே பல பெண்டிருடன் மறைவிற் கலந்து திரிபவரா?வறியரா? அன்ன பிறரா? மனிதன் கலியாணம் பண்ணிக்கொள்ளாமைக்கு அவற்றுட் சிலபலதான் காரண மாதல் கூடும். மனிதன் கலியாணம் பண்ணிக்கொள்வதை

வைத்துக் கலியாணசாமியின் கலியாணத்தை ஆராயவந்த அகலியாணசாமிக்குரியார் மனிதன் கலியாணம் பண்ணிக் கொள்ளாததை வைத்தே தம் சாமியின் அகலியாணத்தையும் ஆராய்க. அம்முறையே நியாயம். அங்ஙனம் ஆராய்ந்தால் தம் சாமி கலியாணம் பண்ணிக்கொள்ளாமையால் மனிதரினும் மேம்பட்டிடாரென்பதை அவர் தெரிவர். கலியாணசாமியின் கலியாணம் மனிதகலியாணத்தின் பிரதியன்று, மூலம். ஆகலின் கலியாணசாமியே எல்லாவித கௌரவத்திற்கும் உரியர் என்க.

சிவ சத்திகளின் திருக்கலியாணம்

கலியாணசாமிகளை வணங்கிவருபவர் பரதகண்டத்திற்று ளிருக்கின்றனர். அச்சாமிகளுள் மகாவிஷ்ணு ஒருவர். அவர் வைணவ சமய தெய்வம். அவர்கலியாணத்தை இங்கு விட்டிடலாம். சிவபெருமான் இன்னொருவர். அவர் சைவசமய தெய்வம். அவர்கலியாணம் ஆராயப்படும். அவர் கலியாணம் செய்துகொண்டார். அவருக்கு மனைவி யார்? அவள்தான் உமை. சிவனார் எப்படி அநாதியோ அப்படி உமையும் அநாதி. அவ்விருவரது கணவன்மனைவியுறவும் அநாதிதான். அவரே கலியாணத்தில் வேண்டப்படும் அனைவரும் அனைத்துமா யிருந்திருக்கமுடியும். ஆகலின் அக்கலியாணத்தைக் கண்டார் யாருமிலர். பின்னர்த் தக்கன், பர்வதன், மலயத்துவசன் என்ற வேந்தர் உளராயினர். தக்கன்மகள் தாக்காயணி. பர்வதன்மகள் பார்வதி. மலயத்துவசன்மகள்மீனாட்சி. அம்மூவரையும் அச்சிவனார் மணந்தனர். அம்மூவருந்தான் பூர்வத்தில் யார்? தக்கன் முதலியோர் தவங் கிடந்தனர். அதற்கு இரங்கினார் அப்பரமர். அவர் அவ்வுமையை அவ்வேந்தருக்குப் புதல்வியராய்ப்போய் வளருமாறு ஆஞ்ஞாபித்தார்.

'ஏதவன் பெறத்தவ மியற்று மென்றியேன்
மாதுனை மகண்மையா மரபிற் போற்றியே
காதலொ டெமக்கருள் கருத்த தாகுமா
லாதலிற் குழவியா யவன்க ணெய்து நீ'

(கந்த புராணம்)

என்றது காண்க. அங்ஙனமே அவள் தாக்காயணியும், பார்வதியும், மீனுட்சியும் ஆயினள். ஆகலின் அவரும் அவ் வுமையே.

சிவன் கதிரவன். உமை அக்கதிரவனின் கதிர். சிவன் சத்தன். உமை அச்சத்தனின் சத்தி. சிவன்குணி. உமை அக்குணியின் குணம். சிவன் ஞானி. உமை அந்த ஞானி யின் ஞானம். சிவன் பொருள். உமை அப்பொருளின் தன்மை. கதிரவன் உலகத்தோ டியையாது தன்னளவில் இருப்பவனுகக் கருதப்படும்போது கதிரவன் எனப்படு வான். அவன் உலகத்தோ டியைந்து உபகரிப்பவனுகக் கருதப்படும்போது கதிர் எனப்படுவான். அப்படியே சிவன் தன்னிலையில் நிற்பவனுகக் கருதப்படும்போது சிவன் அல்லது சத்தன் எனப்படுவான். அவன் பிரபஞ் சத்தோடியைந்து உயிர்களுக்கு உபகரிக்கும்போது சத்தி எனப்படுவான்.

'தன்னை விளக்குவதூம்உம், விடயங்களை விளக்குவதூ உம் தானேயாகிய ஞாயிறென்று தானே விடயங்களை விழக்குழிக் கதிரெனவும், தன்னை விளக்குழிக் கதிரோ னெனவுந் தாதான்மியத்தான் இருதிறப்பட் டியைந்து நிற்கும்; அதுபோலப் புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய்த் தன்னியல்பி னிற்பதூஉம், புறப்பொருளை நோக்கி நின்றுணர்த்துவதூஉ மாகிய இரண்டியல்புடைய பேரறிவாகிய சைதன்னிய மொன் றே அங்ஙனம் புறப்பொருளை நோக்கிநிற்கு நிலையிற்

சத்தி யெனவும், புறப்பொருளை நோக்காது அறிவு மாத்திரையாய் அவாவாது நிற்கு நிலையிற் சிவமென வுந் தாதான் மியத்தான் இருதிறப்பட் டியை ந்து குண குணியாய் நிற்கும்' (சிவஞானபாடியம்) என்றது காண்க. உமையுஞ் சிவனுங் குணகுணி யென்பதை.

'பண்ணுமின் னிசையு நீருந் தண்மையும் பாலும் பாலி
னண்ணுமின் சுவையும் பூவு நாற்றமு மணியு மங்கேழ்
வண்ணமும் வேறு வேறு வடிவுகொண்டிருந்தா லொத்த
தண்ணலு முலக மீன்ற வம்மையு மிருந்த தம்மா'

(திருவிளையாடல்) என்ற

பாடலால் அறியலாம்.

ஒருவனுக்கு வீணை வாசிக்குஞ் சத்தி யிருக்கிறது, ஆயினும் அவன் சம்மதம் வேண்டும். அப்போதுதான் அச்சத்தி அவ்வாசிப்பைச் செய்யும். மற்ற நேரங்களில் அச்சத்தி அவனால் ஒடுக்கப்பட்டு அவனிடம் அடங்கி யிருக்கும். அதனை ஒடுக்கி வைப்பதற்கும் வெளிப்படுப் பதற்கும் அவனே அதிகாரி. அதுபோல் சிவன் தன் சத்தியை யொடுக்குவதும் வெளியிடுவதும் ஆகிய அதிகாரம் அவன்பாலே யுள்ளது. சிவனே அதிகாரி. அவன் சத்தி அவனை அனுசரிப்பதே. அது பற்றிச் சிவன் ஆண், அவன்சத்தி உமையாகிய பெண் எனப்பட்டனர். சிவசத்தியாவது சிவத்தின் வல்லபம் அல்லது வல்லமை. அத்திருவுருவங்கள் வேத சிவாகமங்களால் வந்திக்கப் பட்டவை. சிவன் அச்சத்தியைத் தன்வழியியக்குவதனால் கணவன், அச்சத்தி அவன்வழி யியங்குவதனால் அவனுக்கு மனைவி, கணவன் மனைவியுற வைத்தருவது கலியாணம் ஒன்றே. ஆகலின் சிவனார் உமையைக் கலியாணஞ் செய்து கொண்டாரென்றன அச்சுருதியாதிகள்.

உயிர்களுக்கும் உடலங்களில் ஆண் பெண் அடையாளங்கள் வைக்கப்பட்டன. அதற்குக் காரணம் உயிர்கள் உடலங்களைப் பெற்று வாழவும், அவ்வாழ்க்கையின் குறிக்கோளை எய்தவுமேயா மென்பது. மனிதன் மனிதனுயின் அதனை யறிவான். ஆனுல் விலங்காதியவற்றுக்கு அவ்வுண்மை தெரியாது கலவியின்பத்திற்கே அவை வைக்கப்பட்டன எனக்கொள்வது அவற்றின் இயற்கை.

அன்று பிறந்த குழந்கைகள் போல்வன அனைத்துயிர்களும், அறியாமை அவற்றைக் கௌவ்வியிருந்தது. ஆனுல் முத்திச் செல்வத்தை யனுபவித்தற் குரியன அவை. அச்செல்வம் சிவபிரானிட முள்ளது. அவர்தம் சத்தியைப் பிரயோகித்தார். தனுகரண புவன போகங்கள்உளவாயின. அம்முத்தியையெய்த அவ்வுயிர்களுக்குத் தகுதியும் வேண்டும். அதனைக் கொடுப்பவரும் அவரே. அதற்காக அவர் அவற்றை அத்தனுவாதியுடன் இயைத்தார். அதனுல் அவர் தந்தை. உமைதாய், சருவன்மாக்களும் புதல்வர் ஆயினர். சிவபிரானுகிய கணவர் உமாதேவியாகிய மனைவியைக் கலந்து உயிர்களாகிய பிள்ளைகளைப் பெற்ருர் என்பதற்கு அவர்தம் சத்தியைப் பிரயோகித்து அறியாமையிற் கிடந்த உயிர்களுக்குத் தனுவாதிகளைக் கொடுத்து அவ்வறியாமையைப் போக்கித் தம்மிடமுள்ள முத்திச் செல்வத்தைக் கொடுத்து அனுபவிக்கச் செய்கிருர் என்பது பொருள். அப்பொருளை யறியுந் திறம் யாருக்குண்டு? பிள்ளையைப் பெற்று வாழ்விக்க வேண்டுமென்ற ஆசை கொண்ட மனிதனுகிய கணவன் தன்னுல் விதிமுறையில் மணஞ்செய்து கொள்ளப்பட்ட உத்தம மனைவியின் வழிப் பெற்றெடுத்த மகன் அத்தந்தை தாயரைக் கலவிவெறி கொண்டவரெனவும், அதனுல் கணவனு மனைவியுமாயினரெனவும், தான் பிறந்ததற்கு அவரது வெறியே காரண

மெனவும் பிதற்றுவானு? மாட்டான். அவன் போன்ரு ருக்கே அத்திறமுண்டு. அப்பொருளை அறியாதவன் ஒருவன். அறியவேண்டுமென்ற ஆசையும் அவனுக்கில்லை. பரிகசிப்பதே அவன் நோக்கம். அவன் தோற்றம் வேறு வித மானது. அவன் போன்ருரும் பலர். அவருக்குப் புத்தி சொல்ல எழுந்தன.

'பொங்கருட் பரமா னந்த பூரண முதலே யிங்கு
நங்களை யாளத் தோன்றி யைந்தொழி னடாத்த லோரே
மங்கையை மணந்தா யென்று மக்களை யுயிர்த்தா யென்று
மெங்களி லொருவ ளுக வெண்ணியே யிகழ்ந்துகெட்டேம்'
(காஞ்சிப்புராணம்)

'பெண்ணினைப் புணர்ந்தா னென்றும்
பிள்ளையை யுயிர்த்தா னென்றுந்
தண்ணிய கங்கை மாதைச்
சடையிடைக் கரந்தா னென்று
மெண்ணுரு திகந்தோர்க் கெல்லா
மிரும்பொடி வாயி னட்டி
யண்ணலாங் காமன் வெந்த
தறிந்தனர் சேனை மாதர்'
(பூவாளூர்ப்புராணம்)

என்ற பாடல்கள்.

சிவபிரானுக்கு விநாயகர், வைரவர், வீரபத்திரர், கந்தர் என்ற புதல்வருளர். அவர் ஒருவகையினர். அவரும் அப்பிரானுரின் கருணு விலாசமே. அவ்வவதார மூர்த்திகளை இங்கே விட்டுவிடலாம். மற்ருெரு வகைப் புத்திரர் உயிர்கள். அவ்வுயிர்களுள் இவ்வுலகில் மனிதவர்க்கத்துக்கு மாத்திரமே யுரியது கலியாணம். மனிதர் கலியாணம் பண்ணிக்கொண்டே சந்ததிவிருத்தி செய்ய வேண்டும். சிவனுர் திருவுள்ளம் அது. ஆகலின் கலியாண விதிமுறையையும்

அவர் வகுத்தார். அம்மட்டில் அவர் நின்றிலர். தம் கலி யாணத்தை அவ்விதிமுறையில் செய்துங் காட்டினு ரவர். கலியாணத்துக்கு அவ்விதிமுறை அவ்வளவு அவசியம். அஃதில்லாத கலியாணம் கலியாண மாகாது. அவர் தம் கலியாணத்தைத் தம்பொருட்டன்றி மனிதர் பொருட்டே செய்தார். அதனை.

'ஐய கேளுனக் கில்லையாற் பற்றிக லடியே
முய்யு மாறிவண் மணஞ்செய வுன்னினை' (கந்த

புராணம்) என்றதா லறிக. அவர் செய்துகொண்ட பார்வதி திருக்கலியாணம், மீனுட்சி திருக்கலியாணம் ஆகியவற்றுள் அவ்விதிமுறைகள் சில வந்துள்ளன. அவற்றைத் தெரிய லாம்.

1. பிள்ளைவீட்டார் தமக்குரிய பெரியோர் சிலரைப் பெண்வீட்டிற் கனுப்பிப் பெண்ணுக்குரிய பெரியோரிடம் பெண்பேசிச் சம்மதம் பெற்றுவரச் செய்க,

'அமலனம் முனிவர் மாற்றங் கேட்டலு மவரை நோக்கி
யிமயமே லிறைவன் றன்பா லேகியே யெமக்கிவ் வைக
லுமைதனை வதுவை நீரா லுதவுவான் வினவி வல்லே
நமதுமுன் வம்மி னென்னு நன்றருள் புரிந்தா னன்றே'

(கந்தபுராணம்)

2. கலியாணம் பெண்வீட்டில் நடைபெறுத்துக.

'அனைய தன்மையி லாதியம் பண்ணவன்
பனிகொள் வெற்பிற் படரவம் மன்னவ
னினிய கேளொ டெதிர்கொடு தாழ்ந்துதன்
புனித மாநக ரிற்கொடு போயினுன்' (ஷை)

3. கலியாணத்திற்குச் சுபமுகூர்த்தங் காண்க.

'மணவினைக் கடுத்த வோரை தாம்வரு மளவும்'
(திருவிளையாடல்)

4. மாப்பிள்ளையைக் கலியாண வீட்டிற்கு அழைந்து வருக.

'பையர வுரியி னன்ன நடைப்படாம் பரப்பிப் பெய்த
கொய்யவிழ் போது நீத்தங் குரைகழ லடிந ணைப்பத்
தெய்வமந் தார மாரி திருமுடி நனைப்பத் தென்ன
ருய்யவந் தருளு மைய னுள்ளெழுந் தருளு மெல்லை'
(ஷ)

5. மாப்பிள்ளையை ஆசனத்தில் அமர்த்துக.

'அரிமணித் தவிசி லேறி நிருத்தனுங் கிருந்து' (ஷ

6. பெண்ணையும் அலங்கரித்து மாப்பிள்ளையின் அருகில் அழைத்துவந்து இருக்கச் செய்க.

'அற்பக விமைக்குஞ் செம்பொ னரதன பீடத் தும்பர்ப்
பொற்பக லாத காட்சிப் புனிதனோ டிருந்த நங்கை'
(ஷ)

7. பெண்ணுக்குரியார் பெண்ணின் கையைப் பிள்ளையின் கையில் வைத்துத் தாரைவார்த்துக் கொடுக்க.

'அத்தலை நின்ற மாயோ னுதிசெங் கரத்து நங்கை
கைத்தலங் கமலப் போது பூத்ததோர் காந்த ளொப்ப
வைத்தரு மனுவா யோதக் கரகநீர் மாரி பெய்தான்'
(ஷ)

8. மாப்பிள்ளைமேலும் பெண்மேலும் அக்ஷதையை ஆசிகூறி வீசுக.

'வேத வித்தக ரடிக்கீள் வீழ விண்ணவர் முனிவ
ரேனோர்
சுத்தநா வாசி கூறக் குங்குமத் தோய நந் தோய்ந்த
முத்தவா லரிசி வீசி மூழ்கினர் போக வெள்ளம்' (ஷ)

9. மாப்பிள்ளைக்குப் பால் பழங் கொடுக்க.

'காமரு சுரபித் தீம்பால் கற்பகக் கனிநெய் கன்ன
ஞமரு சுவைய வின்ன நறுமது பருக்கஞ் செம்பொ
ஞமணி வட்டத் திண்காற் பாசனத் தமையப் பெய்து
தேமரு கொன்றை யானைத் திருக்கைதொட் டருள்க
வென்றார்' (ஷ)

10. அப்போது சுமங்கலிகள் மங்கலம் பாடுக.
'புங்கவர் முனிவர் கற்பின் மகளிரும் போதின் மேய
மங்கைய ரிருவ ரோடு மங்கலம் பாட லுற்றார்' (ஷ)

11. வேள்விச் சடங்கு செய்க.

12. பெண்ணின் கழுத்திற் பிள்ளை மங்கல நாண் சாத்துக.

13, அவன் அவள்கையைப் பிடிக்க அதாவது பாணிக்கிரகணஞ் செய்க.

'சுற்றுநான் மறைக ளார்ப்பத் தூரியஞ் சங்க மேங்கக்
கற்றநான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல்
கரைந்த வாற்றான்
முற்றமங் கலநாண் சாத்தி முழுதுல கீன்றாள் செங்கை
பற்றினன் பற்றி லார்க்கே வீடருள் பரம யோகி' (ஷ)

14. பெண்ணும் பிள்ளையும் நெற்பொரிகளை வாங்கி வேள்வித்தீயிற் பெய்க,

15. பெரியோருக்குத் தானங்கள் உதவுக.

16. வேள்வித்தீயை வலம் வருக.

'பின்புதன் பன்னி யோடு பிறைமுடிப் பெருமான் கையி
னன்பொரி வாங்கிச் செந்தீ நாமடுத் தெனைத்து மான
தன்படி வுணர்ந்த வேத முனிவர்க்குத் தக்க தான
மின்பகந் ததும்ப நல்கி யெரிவல முறையால் வந்து'
(ஷ)

17. பெண்ணின் பாதத்தைப் பிள்ளை பற்றி அம்மி மேல் வைத்து அவள் அருந்ததியைப் பார்க்குமாறு செய்க.

‘மங்கலம் புனைந்த செம்பொ னம்மிமேன் மணுட்டி பாத
பங்கய மலரைக் கையாற் பரிபுரஞ் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவா லேற்றிப் புண்ணிய வசிட்டன் றேவி
யெங்கெனச் செங்கை கூப்பி யெதிர்வர வருட்கண்
சாத்தி’ (ஷை)

18. பிள்ளையையும் பெண்ணையும் சம்பிரமாக நகர் வலஞ் செய்விக்க.

‘எட்டு மாதிரக் கரிகளு முடல்பனிப் பெய்த
நெட்டு யிர்ப்பெறி மதுகைவெள் விடைமிசை நீல
மட்டு லாங்குழன் மடவர லொடுமகிழ்ந் தேறிச்
சிட்டர் போற்றிட மறுகிடைத் திருவுலாப் போந்தான்’
(காஞ்சிப்புராணம்)

பிற விதிகளையும் அன்னபிற நூல்களிற் காண்க. அங்ஙனம் சிவபிரானே விதியை வகுத்தும் அனுட்டித்துங் காட்டினுர். அதனுல் அவரது கலியாணம் திருக்கலியாணம் எனச் சிறப்பித்துக் கூறப்பட்டது.

திருக்கலியாணம் பெண்பெயரால் வழங்கல்

திருக்கலியாணஞ் செய்து கொண்டவர் சிவபிரான் ஆனுல் அது பார்வதி திருக்கலியாணம், மீனுட்சி திருக்கலி யாணம் என்றுதான் புராணங்களில் வந்துள்ளது. அதற் குங் காரணமுண்டு. அக்கலியாணங்கள் பெண்வீட்டில் நடந்தன. கலியாணம் பெண்வீட்டிற்றுன் நடைபெற வேண்டும். அதன்பிறகு பெண் மாப்பிள்ளையுடன் அவன் வீட்டுக்கு அனுப்பப்படுவாள். அன்றுதான் அவளது இல்

லிகவாப்பருவம் பூர்த்தியாகிறது. மாப்பிள்ளை வீட்டிற் கலியாணம் சைவமர பன்று. கலியாணம் பெண்வீட்டில் நடைபெறுவது. அப்பொறுப்பு பெண்வீட்டாருடையது. மாப்பிள்ளை அவ்வூருக்குப் புதியனுயு மிருப்பான். பெண்ணின் பெயர்தான் விளம்பர மாகும்.

'வடமொழியில் பெரும் புலமை வாய்ந்தவரும் பல நூல்களை இயற்றிப் புகழ் பெற்றவருமான மகான் அப்பைய தீட்சதர். அவர்கள் ஒருமுறை தம்முடைய மாமனுர் ஊருக்குப் போனுர். யாரோ ஒருவர் புதிதாக நம் ஊருக்கு வருகிருரே என்று ஊரிலுள்ள பல பெண் மணிகள் வாயிலில் தலையை நீட்டி நீட்டிப் பார்த்தார்கள். ஒரு பெண்மணி மற்ருெருத்தியைப் பார்த்து, 'யாரடி இவர்?' என்று கேட்டதற்கு, 'இவர்தானடி நம் ஆச்சாள் அகத்துக்காரர்' என்று பதில் வந்தது. இந்தப்பதில் அப்பைய தீட்சதர் காதிலும் விழுந்தது, அவர் தமக்குள் சிரித்துக்கொண்டார். அவரை அந்தப் பெண்மணி, மகாவித்துவான் என்ருே அல்லது நூலாசிரியர் என்ருே குறிப்பிடாமல் அவருக்குத் தெரிந்த தம் மனைவியின் பெயரைச் சொல்லித் தம்மையும் குறிப்பிட்டிருக்கிருர்களே என்று எண்ணிக் கொண்டார். அப்பைய தீட்சதரின் மனத்தில் இந்த சம்பவம் ஆழப்பதிந்து விட்டது போலும்! எனவே தான், இதை வைத்துக்கொண்டே 'அஸ்மின் க்ராமே ஆச்சாள் ப்ரஸித்தா' (நமக்கு எவ்வளவு பெருமை இருந்தாலும் இந்தக் கிராமத்தில் ஆச்சாள்தான் புகழுடையவள்) என்று கூடச் சொன்னுராம்' (10—9—61

ஆனந்த விகடன் என்ற வரலாற்றையுங் காண்க. அம்முறையில் அத்திருக்கலியாணமும் மேற்கண்டவாறு பெண்பெயரோ டியைந்து வழங்குவதே பொருத்தமாகும்.

திருக்கலியாண விழா

சைவாலயங்களில் ஆண்டுதோறும் திருக்கலியாண விழா நடைபெறுகிறது. அக்கலியாண கோலச் சிவபிரானை யும் உமாதேவியையும் சைவசமயப் பெருமக்கள் வணங்கி வழிபடவேண்டும். அது அப்பெருமக்களுக்கு நலஞ் செய்யும். வேதாகமங்கள் அவ்வாறு சொல்லுகின்றன. பார்வதி கலியாண முதலியன அதற்காகவும் நடந்தன. ஆனால் அவை நடந்த காலம் எப்போதோ? அக்கலியாண தரிசனம் பிரம விஷ்ணுவாதி தேவர்கள், நாரதாதி இருடி கள், இமயன் முதலிய வேந்தர்கள் ஏனைச் சிவபுண்ணிய சீலர்கள் ஆகியோருக்குக் கிடைத்தது. அவர் எய்திய பேறும் பெரிது.

'திரும ணத்திறங் கண்டவர் யாவருஞ் செழுந்தேன்
பருகு வண்டென வானந்த வெள்ளத்திற் படிந்தா
ருருகி யேத்தினர் கையிணை யுச்சியிர் குவித்தா
ரிருக ணீர்மழைத் தாரையின் மூழ்கியின் புற்றார்'

(காஞ்சிப்புராணம்) என்றது காண்க. அக்கலியாணத் துக்கு வந்திருந்தார் அகத்தியர். ஆனால் அக்கலியாண கோல தரிசனம் அவருக்குக் கிடைத்திலது. இடையில் பொதிகைக்கு அவர் வரவேண்டியவ ரானார். பின்னர் அக் காட்சி அங்கு அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவர் அதைத் தரிசித்து இன்புற்றார். அச்சைவ பரம்பரை இன்றும் இருந்து வருகிறது. பின் வருபவருக்கும் அக்காட்சியும் பயனும் கிடைக்கவேண்டும். அதனால் திருக்கலியாணத் திருவிழாக் காட்சி அவசியமாயிற்று.

அவ்வுண்மையை அறியார் சிலர், திருக்கலியாணம் வருடந்தோறும் நடக்கவேண்டுமா? பார்வதிக்குச் சென்ற ஆண்டிற் கட்டினதாலி இவ்வாண்டில் எங்கே போயிற்று?

இப்பரிகாசக் கேள்விகளை அவர் கேட்கின்றனர்- சிந்தனையைப் பறிகொடுத்த பரிகாசம் அது, இலௌகிகத்தில் ஆண்டுதோறும் கொடியேற்றுவிழா நடக்கிறது. கொடி பல கருத்துக்களின் சின்னம். சென்ற ஆண்டில் ஏறிய கொடி இறங்கினலும், சிதைந்தாலும, மறைந்தாலும் அக்கருத்துக்களும் இறங்கின, சிதைந்தன, மறைந்தன என்பதில்லை. அக்கருத்துக்களை அவ்வப்போது அக்கொடியேற்றத்தின் மூலம் நினைத்துப் பார்ப்பதாகவே கொள்ளப்படும். அப்படியே அக்கலியாணத்தையும் அறிஞர் கருதுவார்.

ஒருவன் பல கலியாணங்களைப் பார்க்கலாம். ஆனல் தன் தந்தை தாயாரின் கலியாணத்தை அவனல் பார்க்க முடியாது. ஆனல் அவரது சஷ்டியப்த பூர்த்தி யென்னுங் கலியாணத்தை அவன் பார்த்தல் கூடும். அவர் தரும் ஆசியையும் அவன் பெறுவான் அஃதவனுக்கு மகிழ்ச்சி. அதுபோல் அவன் நல்ல மகனுயிருப்பானுகில் சர்வான்ம பிதா மாதாக்களாகிய சிவ பார்வதி கலியாணத்தை வருடந் தோறும் நடத்திக்கண்டு அவ்விருவரின் அருளுக்குப் பாத்திர மாவான்.

ஒருதாய் ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டு இறந்தாள் அப்பிள்ளையின் தந்தை மற்றெருத்தியை மணக்கிருன். அவளுக்கும் ஒரு பிள்ளைபிறக்கிறது, மூத்தவள் வயிற்றுப் பிள்ளைக்கு இளையவள் வயிற்றுப்பிள்ளை தம்பி. அதிற் சந்தேகமில்லை. அவ்விரு பிள்ளைகளுஞ் சகோதரர்தான். சக உதரர்-ஒருவயிற்றில் தோன்றியவர். அவ்வொரு வயிருவது தந்தையின் வயிறு, அச்சகோதரரின் உயிரணுக்களுக்கு மூலம் அவ்வயிறே. அத்தந்தை இறந்துவிடுகிருன் அவ்விளையாள் மற்றெருவனேடு வாழ்க்கை யொப்பந்தஞ் செய்து கொள்கிருள். அவனுலும் அவளுக்கு ஒருபிள்ளை கிடைக்கிறது. அவள் வயிற்றில் முதற்கணவன் பெற்ற

பிள்ளையும், இரண்டாமவனுகிய வாழ்க்கை யொப்பந்தக் காரன் பெற்ற பிள்ளையும் ஒருதாய் வயிறேபற்றிச் சகோதர ராக மாட்டார். ஏன்? அவ்விருவரின் உயிரணுக்களும் வேறு வேறு ஆடவரின் வயிற்றிலிருந்து வந்தன வென்க, வேம்பும் அரசும் ஒரு நிலத்தில் முளைத்தாலும் வேம்பு வேம்புதான், அரசு அரசுதான், அந்நிலம் ஒன்ருனது பற்றி வேம்பு அரசாகாது, அரசு வேம்பாகாது. தாய் வயிறும் நிலம்போல்வதே. மேலும் பதிவிரதை யென்னுஞ் சொல்லுக்கு அவள் பொருளாதலு மில்லை. பதிவிரதை புனர் விவாகத்துக்கு இசையவேமாட்டாள். அவள் உறவி னர் மானமுள்ளவராயின் அதற்கு அனுமதி கொடார். பெற்றப்பன் இறந்தால் அவன் மகன் வேருேரப்பனைத் தேடிக்கொள்ள முடியாது. அவன் சுவீகாரம் போனுல் அவனைச் சுவீகரித்தவன் சுவீகாரத் தந்தையே, பெற்றப்ப னுகான். அத்தந்தையின் மனைவியே அவனுக்குத்தாய். பெற்றம்மையையும் அவன் விடவேண்டியவனே. அண்ணன் இறந்துபோனுல் அவன் தம்பிக்கு வேருே ரண்ணன் கிடையான். அதுபோல் கணவன் போனுல் அவன் மனைவி வேருெரு கணவனைத் தேடிக்கொள்ள முடியாது. தேடிக்கொண்டால் அவள் மனைவியும், அவன் கணவனுமாகார். கணவனே திரும்பத் திரும்ப வந்து மணந்துகொள்வதாயின் பதிவிரதை எத்தனை தடவையும் மணக்கட்டும். அதிற் குற்றமில்லை. சிவபிரானெருவரே பிறப்பு இறப்பு ஆதி உயிர்க்குண மில்லாதவர். அவருக்குத் துல்லியனுவானும், அதிகனுவானும் எவனுமிலன். அவருக் குப் பத்தினி உமை. அவளும் அன்னளே, அவளே தாக் காயணி, பார்வதி, மீனுட்சியாக வந்தாள், அம்மூவரும் பதிவிரதைகள். அவர்கலியாணம் ஆண்டு தோறும் நடக் கிறது. அப்போதெல்லாம் சிவபிரானே வந்து அவரை மணந்துகொள்கிருர். அக்கலியாணத்தால் அச்சிவனுரது நித்தத்தன்மை அறிந்து போற்றப்படுகிறது. அதற்காக

வும் தாக்காயணி கலியாணம், பார்வதி கலியாணம் மீனுட்சி கலியாணம் என்ற வழக்காறு உளதாயிற்று.

முடிப்புரை

தெய்வத்தை அது எனக்கொண்டு வணங்குஞ் சமயம் எது? அது தெரியவில்லை. அவன் எனக்கொண்டு வழி படுஞ் சமயங்களே பல. அதைத் தேவன், கர்த்தன் என்கிறது ஒருசமயம். பரமண்டலத்தி லிருக்கிற எங்கள் பிதாவே! என்பது அதன் விளி. பரமண்டலத்தி லிருக்கிற எங்கள் மாதாவே! என அது விளியாது. (god is great) ஆண்டவன் பெரியவன் என்கிறது இன்னென்று. (goddess is great) ஆண்டவள் பெரியவள் என்னுது அது. பெண் எனவுங் கொண்டு வணங்கலா மென்பதற்கான குறிப் பொன்றும் அவற்றிற் காணப்பட்டிலது. அவற்றிலுள்ள மாதரும் அத்தெய்வத்தை அப்படித்தான் வணங்கவேண் டும். பெண்பாற் பெயரால் வணங்க அவருக்கும் அனுமதி கிடையாது. அவருக்குரிய தரத்தை யங்கீகரிக்க விரும்பாத ஆடவரே அச்சமயங்களை ஆக்கியிருக்கவேண்டும் என்பது அதனுற் புலனுகின்றது. அப்படியிருந்தும் மாதர் அச்சமயங் களை எதனுல் ஆசரிக்கின்றனரோ? தெய்வத்தை அவள் எனக் கொண்டு வணங்குஞ் சமயம் ஒன்றுண்டு. அவ்வவள் சத்தி யெனவும் படுவாள். அவளுக்குப் பர்த்தா வுண்டு. அவன் சிவன். அவனை அவள் கீழே தள்ளி மிதித்துக் கொண்டு கோர சொரூபத்தோடு நிற்கிற படத்தைப் பலர் பார்த்திருக்கலாம். கோரசொரூபமுள்ள ஒருத்தியால் அல்லது ஆண்மையற்ற ஒருவனுல் அச்சமயம் ஆக்கப்பட் டிருக்கும். அவ்வணக்கத்தை ஆண்மையுள்ள ஆடவரும் பெண்மையுள்ள பெண்டிரும் எங்ஙனம் மேற்கொள்கின்ற னரோ? தந்தை தாயரைப் போற்றி யொழுக வேண்டும். அப்பாக்கியம் பெருத புத்திரப் போலிகளு மிருப்பர். காணு

பத்திய கௌமார சமயங்களை அன்னுருட்பட்டவர் ஆக்கினுர்போலும். சற்புத்திர புத்திரிமார் அச்சமயங்களை அணுகலாமா? தவத்தால் ஓரளவு தெய்வத்தன்மை யெய்திய வுயிர்கள் சில. ஆயினும் அவற்றிடம் உயிர்க்குணம் முனைப்பதுமுண்டு. அதனுல் விரும்பத்தகாத செயல்களுங் காணப்படலாம். அவ்வுயிர்களுள் ஒவ்வொன்றை ஒவ்வொரு சமயம் தெய்வமென்னும். அச்சமயம் மெய்த்தெய்வத்துக் குரிய குணம் செயல்களை அவ்வுயிரின்பால் ஏற்றி அதனைத் தெய்வமெனக் கொண்டு கூறும் புகழ்கள் பொருள் சேராப்புகழ்கள் எனக் கடிந்தொதுக்கினுர் பரிமேலழகர். உண்மை கண்டு உய்தி பெறுதற்கான அறிவும் ஆற்றலும் காதலும் உள்ள ஆடவர்பெண்டிர் அவ்வுயிர்வணக்கச் சமயங்களிற் புகுவாரா?

அங்ஙனம் பெண்டிர்க்காகாத, ஆடவர்க்காகாத, புத்திரபுத்திரிமாருக்காகாத, திருத்தம்பெற விரும்புபவர்க்காகாத சமயங்கள் எத்தனை யெத்தனை?

திருக்குறட் கடவுள் வாழ்த்து பத்துக் குறட்பாக்களைக் கொண்டது. அவற்றிலுள்ள கடவுட் பெயர்களத்தனையும் ஆண்பாற் சொற்கள். பெண்பாலின்றி ஆண்பா லென்பதற்கும், ஆண்பாலின்றிப் பெண்பா லென்பதற்குங் கருத்தில்லை. கடவுள் எட்டுக்குணக்களை யுடையவர். அவை தன்வயத்தனுதல், தூயவுடம்பினனுதல் முதலியன. முதல் எட்டுப்பாடல்கள் அவ்வெட்டுக் குணங்களையும் வகுத்துக் காட்டி ஒவ்வொரு குணத்தையும் அவர் உடையர் என்றன, அக்குணங்களின் தொகையும் அதற்குரியார் அக்கடவுள் என்பதும் ஒன்பதாங் குறளிற் சொல்லப்பட்டன. அக்குணங்கள் உமை. அக்கடவுள் சிவன். அச்சிவனுரே முழுமுதற்கடவுளென்பது சர்வ வேதாகம புராணேதிகாச சாரமாகும். அதை விளக்கும் புராண சரித்திரங்கள் பல. அவற்

றுள் ஒரு சரித்திரம் குறிப்பிடத் தக்கது. அதற்குச் சமமாக வேறொரு சரித்திரம் இருப்பதாகவும், அன்னதொரு சரித்திரம் வேறு தெய்வங்களுக்கு இருப்பதாகவும் தெரியவில்லை. பிருங்கி யென்னும் மஹர்ஷி உமாதேவியையும் விலக்கிச் சிவபிரானை வழிபட்டுப் பேறெய்தின ரென்பது அச்சரித்திரம்.

'ஆன்ற வைம்புல னொருவழிப் படுத்தி
யார்வம் வேரறுத் தையமொன் றின்றி
யூன்றி ரிந்திடி னுந்நிலை திரியா
வுண்மை யேபிடித் துலகங்கண் முழுது
மீன்ற வெம்பெரு மாட்டியை நீக்கி
யெம்பி ரானையே வழிபடு மியற்கை
மூன்று தாளுடை யொருவனுக் கல்லா
லேனை யோர்களான் முடியுமோ முடியா'

(கந்தபுராணம்) என்றது காண்க. மூன்று தாளுடையொருவன்—பிருங்கி. செய்யுள், விக்குள் என்ற சொற்கள் போன்றது கடவுள் என்ற சொல். கடத்தல் என்பது அதன் பொருள். கடத்தலாவது கடந்து நிற்றல். எதைக் கடந்து நிற்றல்? உலகுயி ரனைத்தையுங் கடந்து நிற்றல். அந்நிலையில் அக்குணங்கள் அக்கடவுளிடம் அடங்கிக் கிடக்கும். அவன் தான் மாத்திரமாய் நிற்பான். அப்போது அவனுக்குரிய சிறப்புப்பெயர் சிவன் என்பதே.

'நிறைசிவத் தடக்கஞ் சத்தி' (தணிகைப்புராணம்)

என்றது காண்க. கணவனை அநுசரிப்பதே மனைவிக் கழகு. அதுவே பதிவிரதா தருமம். அதனல் கணவன் தலைமை வெளிப்படும். அஃதவளுக்கும் பெருமையே. அப்படியே தம்மை உமை அநுசரிக்குமாறு செய்து சிவனர் முதன்மை பெறுகிருர். அம்முதன்மையே அப்பிருங்கியாற் போற்றப் பட்டது.

அச்சிவனுர் தம்மின் வேறல்லாத தம் சத்தியை வெளிப் படுத்துகிருர். அந்நிலையிற்ருன் அவர் கொள்கிற உமை யொருபாகர், தாக்காயணி வல்லபர், பார்வதீ நாதர், அம்பி காநாயகர், மீனுட்சிசுந்தரர், கௌரிசங்கரர் என்ற திருக் கோலங்கள் கிடைக்கின்றன. அக்கோலங்களில் மாதருக் குரிய தரமும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. ஆகலின் அம் மாதொருபாகத் திருக்கோலங்களை மாதரும் வணங்கலாம், ஆடவரும் வணங்கலாம். அவற்றுக்காரணம் அப்பரசிவப் பிரபு செய்து கொண்ட திருக்கலியாணமே. அவ்விழாச் சைவாலயங்களில் மிகவும் சிறப்பாக நடந்து சர்வ ஜனங் களுக்கும் பரமசுகத்தைத் தருவதாக.

முற்றிற்று

ஸ்ரீமத் சிவஞானசுவாமிகள் திருவடி வாழ்க.

JAI BHARATH.

உ

இந்நூலாசிரியர் செய்த வேறு நூல்கள்

உரைகள்

1. திருவருட்பயன் (பதவுரை கருத்துரைகள்)
2. கொடிக்கவி ,,
3. ,, (விளக்கவுரையுடன்)
4. போற்றிப்பஃறொடை (புத்துரை)
5. வினாவெண்பா ,,
6. இருபா விருப.்.து (உரை).
7. உண்மை நெறி விளக்கம் (புத்துரை)
8. ,, (புத்துரை விளக்கவுரையுடன்)
9. உண்மை விளக்கம் (புத்துரை)

செய்யுட்கள்

10. சிவ பரத்துவ நிச்சயம்.
11. மேரூர் முருகன் பதிற்றுப்பத்தந்தாதி.
12. கோமதி சதரத்ன மாலை.

வசனங்கள்

13. சமணர் கழுவேற்றம்.
14. சுலோக பஞ்சக விஷயம்.
15. பொது மொழி.
16. சிவஞான போதம் பயனியற் கட்டுரை
17. சுயமரியாதை யியக்கச் சூறுவளி (ஒரு சிவசேவகன்)
18. சித்தாந்த சைவ விளக்கக் கட்டுரை ஆணவமலம்.
19. சைவாலயங்களில் சம்ஸ்கிருத மந்திரங்களேவேண்டும்
20. சைவ சமயிகளுக்கோர் நல்லுரை
21. எது சமயம்? சிவாலயங்களும் சைவசமயமும்.
22. குரு பூசை
23. நான்
24. திருக்குறள் பொது நூலா?
25. சிவராத்திரி நவராத்திரி ஏகாதசி விரதங்கள்.
26. நம: பார்வதீ பதயே
27. நாடும் நவீனரும்

௨

'சுயமரியாதை யியக்கச் சூருவளி' என்னும் நூலுக்கு அவ்வப்போது கிடைத்த அபிப்பிராயங்களிற் சில.

கீழ்க்கண்டவை.

திருக்கயிலாய பரம்பரை, திருவாவடுதுறைமடம் ஆதீன கர்த்தரவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதியவர்கள் Camp திருவிடைமருதூர்.

24—3—1947

"மகாபுருஷச் செல்வச் சிரஞ்சீவி நமது து·இராஜரத்ரத்தின முதலியா ரவர்கட்குச் சர்வா பீஷ்டமும் சிந்தித மனோரத சித்தியும் உண்டாவதாக. தாங்கள் அன்புற்று விடுத்த 'சுயமரியாதை யியக்கச் சூருவளி' என்னும் நூலிலுள்ள பகுதிகள் இருபத்து நான்கனையும் நாம் நன்கு பார்வையிட்டோம். வேதத்திற் கூறப்பட்ட பஞ்சாக்கினி வித்தை, மிருதிகளிற் கூறப்பட்ட பீஜ க்ஷேத்திர வியவகாரம் முதலிய சுபக்ஷ விஷயங்களை மனத்திற் கொண்டு பூர்வ பக்ஷிகளிடம் கேட்கும் ஆசங்கைகளும், நியாயவாத முறையிற் கேட்கும் ஆசங்கைமுறையும் நமக்கு மிக்க திருப்தி கரமா யிருக்கின்றன. தாங்கள் எழுதிய பதிப்புரையில் நமது ஆதீன கவிசார்வபௌமர் கச்சியப்பமுனிவர் திருவாக்கை எடுத்தாண்டு பாரததேச முழுவதும் சைவஸ்தான மென்று குறித்திருப்பது நமக்குத் தனித்த மகிழ்ச்சியைத் தருகின்றது. தங்களை நாம் நேரிற் பார்த்துக் கலந்துகொள்ள விரும்புகிறபடியால், இவ்விடம் தாங்கள் கூடிய சீக்கிரம் வருகிற விவரத்திற்குத் தெரிவிக்க வேண்டியது"

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் கும்பகோணம் முகாம்—உத்திர மேரூர்.

16—4—1947

தமிழ் நாட்டின் இன்றைய நிலைமையில் மக்களுக்கு இன்றியமையாததும் விலை மதிப்புக்கடங்காததுமான ஒரு நூலுண்டெனில், அது உத்திர மேரூர் சிவசேவகனின் 'சூருவளி' நூலே.

Sri T. Ramalingam Pillai, M. A., Retired Head Translator to Govt. and Author of several works in English, Tamil and Malayalam, Trivandrum.

24—2—1952.

I have read, with no less pleasure than profit, a few pages, here and there, of 'A Counter - Blast to The Self-respecting Movement' (சுயமரியாதை யியக்கச் சூறாவளி) by M. R. Ry. A. Easwaramoorthy Pillai Avl who has written the work in Tamil under the pen-name, A 'Siva Sevakan.' The author is the worthy son of the worthier father, the well-known Tamil scholar poet and thinker M. R. Ry. Arumukhanainar Pillai Avl of Tirunelveli Pettai, of happy memory. The present writer is a chip of the old block.

The book is an explosion of the socalled, rather, miscalled 'Self-respecting movement' in the Tamil land. Its logic is irresistible. The entire work running to a neat little volume of one hundred and sixty one demi-octovo pages is in fine classical Tamil. Its peculiarity lies in the fact that the learned and critical author has written it in the form of querries, after the ancient Socratic fashion. He does not impose his own views on the reader; but he sets the reader a-thinking. The method seems to be original, so far as Tamil is concerned. He has divided his subject-matter under two dozen captions. It is one of the few books I have reserved for careful reperusal and rumination.

I wish Mr. Easwaramoorthy Pillai a long lease of life in which he may continue to employ his poetical and critical talents, for the edification of the Tamil public. He is not only a great Tamil scholar but also a keen student of Sanskrit and English. It is very rarely that we come across a similar tri-linguist in Tamilakam.

உ

சிவமயம்

திருவருள் பெற்ற அறுபத்து மூன்று நாயன்மார்கள் குருபூஜை அன்னதான சத்திரம்

தடிவீரய்யன்கோவில் தெரு, திருநெல்வேலி டவுண்.

ராயல் பிரஸ், தென்னம்பிள்ளைத்தெரு, நெல்லை-6.